# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 225/மா/2025
நாள் 25.07.2025

| | |
|---|---|
| திரு.C.ஹரிபாபு<br>ஆவடி | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர்,<br>சென்னை | எதிர் மனுதாரர் |

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு.C.ஹரிபாபு என்பவரின் 16.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2024 அன்று பெறப்பட்டு 225/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 055, ஆவடி, மிட்டணமல்லி, ஹை ஸ்கூல் தெரு, கதவு எண் 21 என்ற முகவரியில் வசிக்கும் திரு.C.ஹரிபாபு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

> “நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் பணிபுரியும் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் மீது லஞ்சம் புகார் கடிதம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலம் பொதுமக்கள் நகராட்சி, மாநகராட்சி சம்பந்தமாக ஊழல் லஞ்சம் முறைகேடு புகார் மனு கொடுத்து உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலம் விசாரணை செய்து குற்றச்சாட்டு மீது நடவடிக்கை எடுக்கும்படி 2021 முதல் 2024 வரை ஆணை உத்தரவு அல்லது கடிதம் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் லஞ்சம் வாங்கிக் கொண்டு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு. விஜயகுமார் செயல்பட்டு உள்ளார் சில நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கி உள்ளார்.
>
> தங்கள் துறை நகராட்சி நிர்வாக ஆணையரகம் இணையதளத்தில் 2021 முதல் 2024 வரை பதவி உயர்வு பணியிட மாற்றம் உத்தரவுகள் அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் மற்றும் நகராட்சி மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிகள் நிகழ்ச்சி தொகுப்புகள் போன்றவை அனைத்தும் செயல்படுத்தாமல் முறைகேடுயாக சிலர்க்கு பதவி உயர்வு பணியிட மாற்றம் செய்து உள்ளார். நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார் நகராட்சி நிர்வாக ஆணையரகம் இணைய தளத்தில் 3 ஆண்டு காலம் பொதுமக்கள் பார்க்காத வண்ணம் செய்யப்பட்டுள்ளார். மீண்டும் இணையதளத்தில் வெளியீடு வேண்டும். 2017 முதல் 2024 வரை லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் அலுவலகத்திற்கு நகராட்சி மாநகராட்சி பணியாளர்கள் பொது மக்கள்

புகார் மனு அளித்தது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்தில் இருந்து 2017 முதல் 2024 வரை அனுப்பி அறிக்கை மற்றும் தபால் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையத்திற்கு வந்து அறிக்கை மீது நடவடிக்கை எடுக்காமல் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் விஜயகுமார் குற்றச்சாட்டு உள்ள நபர்களை பணம் வாங்கிக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களை காப்பாற்றி வந்துள்ளார்.

2021 முதல் 2024 வரை நகராட்சி நிர்வாக ஆணையரகம் வந்த மெயில் அல்லது இணையதளம் மற்றும் பொதுமக்கள் கொடுத்த புகார்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் திரு.விஜயகுமார் மெத்தனமாக இருந்துள்ளார். இவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.02.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் கோரப்பட்டது.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது 01.04.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.5114/2025/சி1–ன்அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

''மனுதாரரின் புகார் மனுவில், 2021 முதல் 2024 வரை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தினால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மீது நடவடிக்கை எடுக்காமல் சில நபர்களுக்கு சாதகமாக செயல்பட்டு பதவி உயர்வு வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2021 முதல் 2024 வரையிலான பதவி உயர்வு / பணியிட மாற்ற உத்தரவுகள் / சுற்றறிக்கைகள்/ நிதி ஒதுக்கீடு /நிகழ்ச்சி தொகுப்புகள் ஆகியவற்றை இணையதளத்தில் பதிவேற்றாமல் முறைகேடாக சிலருக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி புகார் மனுவில், 2017 முதல் 2024 வரையிலான ஊழல் மற்றும் கண்காணிப்பு துறைக்கு நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் மீது பொதுமக்கள் அளிக்கும் புகார் மனுக்கள் மீது நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் குற்றம்சாட்டப்பட்ட நபர்களை காப்பாற்றி வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கான முறைமன்ற நடுவத்தினால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மீது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவு பெற்று சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் அல்லது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களிடம் அறிக்கை பெறப்பட்டு அதனடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நேர்வுகளில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரம் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் ஆணையத்தின் ஆணைகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு உரியதாகும். இவ்வாறான ஆணைகள் மீது நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்கள் தனிப்பட்ட முறையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்க இயலாது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் 2017 முதல் 2024 வரையிலான ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை மூலம் பெறப்படும் மனுக்கள் மற்றும் நகராட்சி மற்றும் மாநகராட்சி தொடர்பாக பெறப்படும் அனைத்து விதமான புகார் மனுக்களும் முறையாக தபால் பிரிவில் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட பிரிவு எழுத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் பிரிவு எழுத்தரால் மேற்படி பெறப்பட்ட தபால்கள் கோப்புகளாக தயார் செய்யப்பட்டு, கண்காணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டும், அதன் பின்பு இணை ஆணையர் (நிர்வாகம்) அல்லது சம்பந்தப்பட்ட இணை இயக்குநர்களால் கையொப்பமிடப்பட்டு, அதன் பிறகே கூடுதல் இயக்குநர் அவர்களின் கையொப்பமிடப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கோப்பின் மீது முடிவெடுத்து ஆணை வழங்கிட அனுப்பி வைக்கப்படும். மேலும் மேற்படி கோப்பின் மீது அரசால் இறுதி செய்யப்பட வேண்டிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறுள்ள கோப்புகள் மீது முடிவெடுத்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மட்டுமே உத்தரவு பிறப்பிக்க இயலும். எந்த கோப்பிலும் இறுதி முடிவெடுத்து உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு இல்லை என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களை பணி மாறுதல் செய்யும் அதிகாரம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மட்டுமே உள்ளது. அதே போன்று உயர்நிலை பதவிகளாக இருந்தால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அரசாணை பிறப்பித்து பதவி உயர்வு மற்றும் பணியிட மாறுதல் வழங்க இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மனுதாரர் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்கள் நகராட்சி / மாநகராட்சி அலுவலர்கள் / பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கோ மற்றும் பணியிட மாறுதல் செய்வதற்கோ எந்தவித அதிகாரமும் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளில், கோப்புகளில் கையொப்பம் இடுவதை விட ஆணை பிறப்பிப்பதற்கோ, முடிவெடுப்பதற்கோ கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு தனிப்பட்ட அதிகாரமோ அல்லது பொறுப்போ எதுவுமில்லை.

மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள 2021 முதல் 2024 வரையிலான பதவி உயர்வு / பணியிட மாற்ற உத்தரவுகள் / சுற்றறிக்கைகள் / நிதி ஒதுக்கீடு / நிகழ்ச்சி தொகுப்புகள் ஆகியவற்றை இணையதளத்தில் பதிவேற்றுவது நகராட்சி நிர்வாக துறையின் IT பிரிவின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது. நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் அவர்களால் நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் பணியமைப்பு (Establishment) தொடர்புடைய கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, திரு.C. ஹரிபாபு அவர்கள் அனுப்பியுள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் அடிப்படை ஆதாரமற்றது எனவும், உண்மைக்குப் புறம்பானது எனவும், இப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் புனையப்பட்டது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இத்துறையைச் சார்ந்த சில அலுவலர்கள் கூடுதல்

இயக்குநர் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக திரு. C. ஹரிபாபு அவர்களை தூண்டப்பட்டு இவ்வாறு தொடர்ந்து அடிப்படை, ஆதாரமற்ற உண்மைக்குப் புறம்பான தகவல்களுடன் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டு வருகிறது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. It is also stated that Thiru C. Haribabu is a habitual paid petition writer.

எனவே, திரு.C.ஹரிபாபு அவர்கள் அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்துள்ள அடிப்படை ஆதாரமற்ற புகார் மனுவினை நிராகரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரது மனுவினை பரிசீலனை செய்ததில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநராக பணிபுரியும் திரு. விஜயகுமார் என்பவர் மீது புகார் தெரிவித்துள்ளார். மேலும், இந்நேர்வு குறித்து பின்வருமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் நோக்கமானது,–

"An Act to provide for the establishment of Ombudsman for conducting enquiry on the allegations against the elected members of the local bodies and the officers and employees working under the local bodies in the State of Tamil Nadu and for matters connected therewith and incidental thereto."

மேலும், மேற்படி சட்டம், பிரிவு 2(7)–ல் உள்ளாட்சி அமைப்பு என்பதன் பொருள் வரையறை பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

xxx xxx
2.(7) "local body" means.-

(i) the Municipal Corporation of Chennai, Madurai, Coimbatore, Tiruchirapalli, Tirunelveli, Salem, Tiruppur, Erode, Vellore, Thoothukudi, Thanjavur, Dindigul or any other municipal corporation that may be constituted under any law for the time being in force; or

(ii) a Municipal Council constituted under the Tamil Nadu District Municipalities Act, 1920; or

(iii) a District Panchayat constituted under the Tamil Nadu Panchayats Act, 1994.

எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், மேற்கண்ட சட்டப்பிரிவின் வரம்பிற்குள் உட்படாததால், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க வழிவகையில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. C. ஹரிபாபு,
எண் 21, ஹை ஸ்கூல் தெரு,
மிட்டணமல்லி, ஆவடி,
சென்னை–600 055.

(2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(3) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/8/25
செயலாளர்.

1.8.25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032